சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.117/2020</u>

13.02.2026

வா.சா.1 திரு. தெட்சிணாமூர்த்தி, த/பெ. சுப்பையன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியவில்லை. எனது தகப்பனார் எனது தாயார் பெயரில் சொத்து வாங்கியுள்ளார். அது சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து இல்லாமல் என் தகப்பனார் பெயரில் மேலும் 1 ஏக்கர் நிலம் உள்ளது. என்னுடன் பிறந்தவர்கள் மாரிமுத்து, ருக்மணி, நவநீதகிருஷ்ணன், ராஜேந்திரன், கிருஷ்ணவேணி, சத்தியமூர்த்தி ஆவார்கள். அதில் சத்தியமூர்த்தி இறந்துவிட்டார். சத்தியமூர்த்தியின் வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான். ராஜேந்திரனும் இறந்துவிட்டார். அவருக்கும் வாரிசுகள் உள்ளனர். என்னுடன் பிறந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். நான் சொல்வது போல் அனைவரையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் மற்றவர்களிடம் எனக்கு பிரச்னையில்லாததால் சேர்க்கவில்லை. எனது தகப்பனார் பெயரில் உள்ள 1 ஏக்கர் சொத்தை பொறுத்து இதுவரை பாகம் பிரித்துக்கொண்டோமா என்றால் இல்லை. 1958 ஆம் வருடம் எனது தாயார் கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தான் தாயார் பெயரில் கிரயம் வாங்கினார். எனது தகப்பனார்தான் எனது தாயார் பெயரில் கிரயம் வாங்கினார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாயார் திருமணத்தின் போது அவரின் பெற்றோர் வீட்டில் போட்ட நகைகளை வைத்தும் ஆடு, மாடு வளர்த்து வந்த பணத்தை வைத்தும் அவரின் பெற்றோரிடம் பெற்ற பணத்தை வைத்தும் அவர் பெயரில் சொந்தமாக கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாங்கும் போது எனக்கு 9 வயதிருக்கும். எனக்கு 9 வயது இருப்பதால் தாவா சொத்தை என் தாயார் எப்படி வாங்கினார் என்று எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனது தாயார் கிரயம் வாங்கும் போது நானும், மாரிமுத்து, ருக்மணி ஆகியோர் மட்டுமே பிறந்திருந்தோம். நான் 1949 லும், மாரிமுத்து 1959 லும், ருக்மணி 1958 லும் பிறந்தோம். ருக்மணி, மாரிமுத்து எப்போது பிறந்தார்கள் என்று எனக்கு

தெரியாது என்றாலும் வழக்கிற்காக பின்னிட்டு மனப்பாடம் செய்து சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தந்தை 1990 ஆம் வருடம் இறந்துவிட்டார். எனது தந்தை உயிருடன் இருந்தவரை தாவா சொத்தை பாகம் பிரித்துக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை எனது தந்தை வாங்கவில்லை என்பதால்தான் பாகபிரிவினையோ அல்லது வேறு வகையில் பிரிவினையோ செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை எத்தனை வருடங்கள் இராணுவத்தில் பணியாற்றினார் என்றால் தெரியவில்லை. எனது பெற்றோர்கள் எனக்கும் சகோதர, சகோதரிகளுக்கும் திருமணம் செய்துவைத்தார்கள் என்றால் எனது தகப்பனார் இருக்கும்வரை அவர் திருமணம் செய்துவைத்தார், 1990 ல் இறந்த பின்னிட்டு மற்றவர்களுக்கு நான்தான் திருமணம் செய்துவைத்தேன். நான் திருமணம் செய்துவைக்கவில்லை என்றாலும் தாவா சொத்திலிருந்து கிடைத்த வருமானத்திலிருந்து எனது தாயார் திருமணம் செய்துவைத்தார் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பு வரை நான் எந்த வேலைக்கும் செல்லாமல் வருமானம் எதுவும் பெறாமல் என் பெற்றோர் வருமானத்தில்தான் வாழ்ந்து வந்தேன் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்த பின்னிட்டு நான் தனிக்குடித்தனம் சென்றேன் என்றால் சரியல்ல. என் மனைவி இறந்த பின்னிட்டு கூட்டுக்குடும்பமாக தான் இருந்தேன். கூட்டுக்குடும்பமாக இருந்த போது நான் வருமானம் எதுவும் பெறாமல் பெற்றோர் வருமானத்தில்தான் வாழ்ந்துவந்தேன் என்றால் சரியல்ல. எனது தாயார் இறந்த காரியத்திற்கு நான் சென்றேனா என்றால் இல்லை. இறந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். பிரேதத்தை என் வீட்டிற்கு எடுத்து வரகேட்டேன் எடுத்து வராததால் நான் செல்லவில்லை. 2 ஆம் பிரதிவாதி ருக்மணி இறப்பு காரியத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். இறந்தவர்களை பற்றி வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 1, 2 பிரதிவாதிகள் இறந்த பின்னிட்டு அவர்களின் வாரிசுகளை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தாயார், சகோதரிகளுக்கு எவ்வளவு நிலங்கள் எழுதிவைத்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை 1 ஆம் பிரதிவாதி இறக்கும் வரை அவர் அனுபவம் செய்துவந்தார் என்றாலும் 1 ஆம் பிரதிவாதி செட்டில்மெண்ட் எழுதிவைத்த பிறகு 2 முதல் 4 பிரதிவாதிகள் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 7 மா 12 குழியாகும். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கும் பிரதிவாதிகளுக்கும்

இடையே பிரச்னை இல்லை என்றால் சரிதான். எனது தாயாரை அழைத்துக்கொண்டு போய் சொத்தை எழுதிவாங்கியதால் வழக்கு தாக்கல் செய்தேன். பத்திரம் எழுதிய விவரம் தெரிந்த பின்னிட்டு காவல்நிலையத்தில் புகாரோ அல்லது ரத்து செய்ய சட்ட நடவடிக்கையோ எடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள சாகுபடி சம்பந்தமான ஆவணங்கள் வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எனது சகோதரிகளுக்கு எழுதிவைத்த நிலம் போக பாக்கி நிலம் உள்ளது என்றால் சரிதான். செட்டில்மெண்ட் எழுதிவைத்த நிலத்தை தவிர மீதமுள்ள நிலத்தை என் தாயார் உயிருடன் இருந்தவரை அவரும் அவர் இறப்பிற்கு பின்னிட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது சகோதர்கள் தாவா சொத்து சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் எனது சகோதரிகளுக்கு உரிமையள்ளது தெரிந்துதான் எனது மற்ற சகோதரர்கள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் உயிருடன் இருந்த போது அவரின் விருப்பப்படிதான் செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றால் சரியல்ல. அதனால்தான் எனது தாயாரும் சேர்ந்து இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக எனது தாயாரும், சகோதரிகளும் நன்னிலம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது சகோதரிகள் நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே அ.வ.எண். 44/2020 என்ற எண்ணில் நன்னிலம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரிந்துதான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வேண்டும் என்றே எனது சகோதரிகள் தாக்கல் செய்த வழக்கு விவரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மின்இணைப்பு மோட்டார் உள்ளது என்றால் சரிதான். மின் இணைப்பு என் தாயார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். மின் இணைப்பு மோட்டாரில் என் தாயாரும் தற்போது என் சகோதரிகளும் இருபோகம் சாகுபடி செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல, நான்தான் சாகுபடி செய்கிறேன். வா.சா.ஆ.6 ஆவணத்திலுள்ள போட்டோக்களை டவுனிலிருந்து ஆட்களை வரவழைத்து கேமரா மூலம் எடுத்தேன். எந்த தேதியில் எடுத்தேன் என்று தெரியவில்லை. போட்டோக்களில் எந்த இடம் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். போட்டோ எடுத்ததற்காக உரிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணமான போட்டோவில் கண்ட சொத்து தாவா சொத்து இல்லை என்றாலும் வேறு எங்கோ நின்று எடுத்த போட்டோவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.5 ல் உள்ள ரசீதுகள் இன்சூரன்ஸ் பெற்றதற்கும், சொசைட்டியில் கடன் கட்டியதற்கும் உள்ள ரசீதாகும். ரசீதுகளில் எந்த நிலத்திற்கு வழங்கப்பட்ட ரசீது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ரசீதுகள் வழக்கிற்காக மோசடியாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது சம்பந்தமாக ரசீது தாக்கல் செய்துள்ளனோ என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் ரசீது தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக புகார் கொடுத்தது போல் ஆவணம் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில எனக்கு எவ்வித உரிமையும் அனுபவம் இல்லை என்றாலும் பிரதிவாதிகளிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முன்னுககு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.